




We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## பிப்ரவரி - 2020

*We Are Here..!! To Guide You..!!*






# WeShine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## பிப்ரவரி - 01.02.2020

We Shine Academy™
guiding you to get through


Main Office @

**WeShine Study Circle**
Chrompet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**WeShine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- தேசிய நிகழ்வுகள்
- சர்வதேச நிகழ்வுகள்
- வர்த்தக நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்










# தேசிய நிகழ்வுகள்

- **கன்ட்ரோலர் ஜெனரல் ஆ.்.ப் அக்கவுண்ட்ஸ் (சிஜிஏ) இந்திய அரசின் நிதி பற்றாக்குறை** குறித்து **தரவுகளை வெளியிட்டது.**
  - அந்த அறிக்கையின்படி, இந்தியாவின் நிதிப் பற்றாக்குறை 2019 டிசம்பரில் முழு ஆண்டு இலக்கில் 132.4% ஐ தொட்டது. சிஜிஏ தரவுகளின்படி, நிதி பற்றாக்குறை 9,31,725 கோடி ரூபாய்.
  - 2018 – 19 வரவுசெலவுத் திட்டத்தின் போது, நிதி பற்றாக்குறை 112.4% ஆக இருந்தது.
  - **செய்தி துளிகள்:**
    - 2020 மார்ச் இறுதிக்குள் பற்றாக்குறையை 7,03,760 கோடி ரூபாயாகக் குறைக்க முயற்சிக்கிறது.
    - அண்மையில் வெளியிடப்பட்ட பொருளாதார ஆய்வு, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.3% நிதி பற்றாக்குறை இலக்கை தளர்த்த வேண்டும் என்று தெரிவிக்கிறது.
    - 2020-21ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3% ஆக பற்றாக்குறையை குறைக்க இது அறிவுறுத்துகிறது.

- உலகின் முன்னோடித் திட்டமான நியூட்ரினோ திட்டம் தேனி மாவட்டத்தில் விரைவில் தொடங்கப்பட உள்ளதாக இந்திய

அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கழகத்தின் பெரும் திட்டத் தலைவர் பிரவீர் அஷ்தனா தெரிவித்தார்.

- கொடைக்கானல் அப்சர்வேட்டரியிலுள்ள இந்திய வான் இயற்பியல் ஆய்வகத்தில், நியூட்ரினோ குறித்த கருத்தரங்கு வெள்ளிக்கிழமை நடைபெற்றது.
- இக்கருத்தரங்கில் அவர் கலந்துகொண்டு, நியூட்ரினோ ஆய்வு குறித்தும், இந்திய அரசு மேற்கொள்ளும் பெரும் அறிவியல் திட்டங்கள் குறித்தும் பேசினார்.
- **செய்தி துளிகள்:**
  - **மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியான தேனி மாவட்டத்தில் நியூட்ரினோ ஆய்வு மையம் தொடங்கப்படவுள்ளது.**
  - கருத்தரங்கில், கொடைக்கானல் வான் இயற்பியல் ஆய்வகத்தைச் சேர்ந்த விஞ்ஞானி செல்வராஜ், எபனேசர் மற்றும் இந்திய அறிவியல் மற்றும் தொழில் நுட்பக் கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் சுமார் 50-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

## சர்வதேச நிகழ்வுகள்

- **சீனாவில் உருவாகி, இந்தியா உள்ளிட்ட 22 நாடுகளுக்கு புதிய வகை கரோனா வைரஸ் பரவியுள்ளதைத் தொடர்ந்து, ஐ.நா.வின் உலக சுகாதார அமைப்பு சர்வதேச சுகாதார அவசர நிலை அறிவித்துள்ளது.**

- கரோனா வைரஸ் பரவலை சர்வதேச சுகாதார அவசரநிலையாக அறிவித்துள்ளது.
- **உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரஸ் அதானோம்**
- **செய்தி துளிகள்:**
  - கரோனா வகையைச் சேர்ந்த அந்த வைரஸ், சீனாவில் கடந்த 2002 மற்றும் 2003-ஆம் ஆண்டுகளில் 650 பேரது உயிர்களை பலி கொண்ட ‘சார்ஸ்’ வைரஸின் தன்மையை ஒத்துள்ளதாக விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளர்.
  - காங்கோ ஜனநாயகக் குடியரசில் எபோலா நோய் பரவல் தொடர்பாக உலக சுகாதார அமைப்பு கடைசியாக சர்வதேச சுகாதார அவசரநிலையை 2019 ஜீலை மாதம் அறிவித்தது.
  - அதற்கு முன்னர், ஜிகா வைரஸுக்கு 2016ஆம் ஆண்டில் மற்றும் மேற்கு ஆப்பிரிக்காவில் எபோலா நோய் பரவியதற்காக 2014 இல் சர்வதேச அவசரநிலைகள் அறிவிக்கப்பட்டன.

## வர்த்தக நிகழ்வுகள்

- **நாட்டின் பொருளாதார வளர்ச்சி 2020-2021 நிதியாண்டில் 6 முதல் 6.5 சதவீதமாக எழுச்சி பெறும் என்று பொருளாதார ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.** பொருளாதார சீர்திருத்தங்களை மேற்கொண்டு விவசாயம் மற்றும் கட்டுமானத்

துறைகளில் முதலீடுகளை அதிகரிப்பதன் மூலமே இது சாத்தியமாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- அரசுக் கட்டுமான துறையில் செய்யும் முதலீடுகளால் நடப்பாண்டின் (2019-20 ஆண்டின்) இரண்டாவது அரையாண்டில் நாட்டின் வளர்ச்சி 5 சதவீதத்தை எட்டும். அரசுக்குள்ள வலுவான பலத்தின் மூலம் பொருளாதார சீர்திருத்தங்களை துரிதப்படுத்தினால் 2021-இல் நாட்டின் வளர்ச்சி 6 முதல் 6.5 சதவீதமாக அதிகரிக்கும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- **செய்தி துளிகள்:**
  - பயிர்க் கடன், நீர்ப்பாசன வசதி, கடன் பெறுவதை எளிமைப் படுத்துதல் போன்ற விவகாரங்களின் மூலம் இந்த நிலையை அடையமுடியும் என்று அறிக்கை கூறுகிறது.
  - உற்பத்தித் துறையில் 2018-19 இல் 4.9 சதவீதமாக இருந்த வளர்ச்சி, ஒரு சதவீதத்துக்கும் கீழாக 0.9 என குறைந்தது.
  - அடிப்படை வசதிகளை மேம்படுத்த 2020-25 இல் ரூ.102 லட்சம் கோடி முதலீட்டை மத்திய அரசு அறிவித்துள்ளது. இந்த முதலீடுகளால் கட்டுமானத் துறை வளர்ச்சி அடையும்.

## விளையாட்டு நிகழ்வுகள்

- **ஆஸ்திரேலியன் ஓபன் டென்னிஸ் போட்டியில் மகளிர் இரட்டையர் பிரிவில்** ஜனவரி 31 அன்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற **இறுதிச்சுற்று ஆட்டத்தில் ஹங்கேரியைச் சேர்ந்த டிமியா பாபோஸ்** பிரான்ஸ் வீராங்கனை கிறிஸ்டினா இணை பார்போரா (செக் குடியரசு) - ஹிஸியா (தைவான்) இணையை வீழ்த்தி **சாம்பியன் பட்டம்** வென்றது.

## திருக்குறள்

**குறள்: 95**

குறள் பால்: அறத்துப்பால்

குறள் இயல்: இல்லறவியல்

குறள் அதிகாரம்: இனியவை கூறல்

**பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு**

**அணியல்ல மற்றுப் பிற**

**விளக்கம்:** ஒருவனுக்கு அணியாவது, பெரியோரிடத்தில் வணக்கமும், எல்லோரிடத்தும் இனிய சொல்லும் உடையவனாதலே இவையல்லாமல் உடம்பில் அணியும் வேறு அணிகள் அணிகளாகா.